With Best Compliments from :

ஸ்ரீமதி. & ஸ்ரீ. ஸ்ரீராம பட்டாச்சாரியர்

(ஸ்ரீ ஸத்யநாராயணஸ்வாமி சன்னதிஅர்ச்சகர்)

எண் : 1-C, வேலுத் தெரு, மேற்கு மாம்பலம்

சென்னை - 600 033.

✆ : **044 - 4741499**

ஸ்ரீ :

ஸ்ரீமத்விகநஸமஹாகுரவே நம :

ஸ்ரீவைகாநஸஸூத்தரீய

ப்ரார்த்தனா ஸூக்தம்

ஸுஸ்வரத்துடன்

தமிழ் பொருளுரையுடன்

சங்கேந்தி டாக்டர் S. முத்து M.A., M.Phil., B.Ed., MLIS., Ph.D.

பரிசோதித்தவர்

ஸ்ரீ.உ.வே. K.S. ஸ்தலஸயனபட்டாச்சாரியார் · போந்தூர்

வெளியிடுவோர்

ஸ்ரீ ராஜாமணிபட்டாச்சாரியார் & சன்ஸ்

பழைய எண் : 9, சன்னதித் தெரு, திருநெல்வேலி · 1

ஸ்ரீ :

விக்ஞாபனம்

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணனுடைய பரம அனுக்ரஹத்தால் நாம் தினமும் ஸ்ரீமந்நாரணனுக்கு க்ருஹத்திலும், ஸன்னிதியிலும் நித்யஸேவையை (கைங்கர்யங்களைச்) செய்வதே செய்து வருகிறோம். நமது அர்ச்சா சாஸ்த்ரமும் இதையே அனுசந்திக்கிறது. ஸ்ரீவைகாநஸர்கள் முழுவதுமாக அர்ச்சைக்கே உகப்பானவர்கள். அவர்கள் அர்சசையினாலேயே இஹபர ஸுகத்தை / பலனை அடைகிறார்கள் என்று பற்பல க்ரந்தங்கள் ஸ்ரீவைகாநஸத்தில் பேசுகிறது. ஸ்ரீவைகாநஸர்கள் எவ்வொரு விஷயத்தை ஆரம்பித்தாலும் ஸ்ரீமந்நாராயணனை ப்ரார்த்தித்து தான் ஆரம்பிக்க வேண்டும் என்ற நியதி உள்ளது. இந்த ஸூக்தத்தை அழகான பொருளுரையுடன் எனது குமாரன் சிர. V. முரளீதரனுடைய வைவாஹ ஸமயத்தில் 26.11.2001 அன்று வெளியிட்டு ஸ்ரீமத்விகநஸாசார்யன் திருவடித் தாமரைகளில் ஸமர்ப்பிக்கிறேன். ஸ்ரீவைகாநஸ இளம்முறைகள் இதை அர்த்தத்துடன் அனுசந்தித்து பயனடைய வேண்டுகிறேன்.

இப்படிக்கு

15.11.2001

V. இராஜாமணி என்கிற

திருநெல்வேலி · 1

வரதக்ருஷ்ண பட்டாச்சாரியார்

நூன்முகம்

ஸ்ரீலக்ஷ்மீ வல்லபாரம்பாம் விகனோ முனிமத்யமாம் !
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் !!

ப்ரார்த்தனை அனைவரும் செய்யும் விஷயமாகும். ஆனால் எப்பொழுது ப்ரார்த்திக்க வேண்டும் என்ற நியமங்கள் (விதிமுறைகள்) பகவத்ஸாஸ்த்ரங்களில் காணக்கிடக்கிறது. நமது ஸ்ரீவைகாநஸ பகவத் ஸாஸ்த்ரத்தில் அனைத்து ஸுபங்களிலும் முதலில் பகவத் ப்ரார்த்தனை செய்யச்சொல்லுகிறார். அப்பொழுது அனுஷ்டிக்கப்படும் (கடைபிடிக்கும்) மந்த்ரமே இந்த ப்ரார்த்னாஸூக்தம். இதை பெரியோர்களிடம் ஸம்ஸ்க்ருத உச்சரிப்புடனும் ஸ்வரத்துடனும் தெரிந்துகொண்டு தினமும் அனுசந்திப்பது உத்தமமாகும். இந்த ஸூக்தத்தில் நாம் முக்கியமாக தெரிந்துகொள்ள வேண்டியது பகவான் தன்னை தானே பலப்படுத்திக் கொள்வதற்கு நம்மை ஒரு கருவியாக பயன்படுத்தி தானே அனைத்தையும் செய்தான் / செய்கிறான் என்ற இவ்விஷயத்தை முழுவதுமாக (ப்ரார்த்தனா ஸூக்தத்தில்) கையாண்டுள்ளார். ஸர்வவ்யாபியான பகவான் ஸ்ரீமந்நாராயணன் அனைத்திலும், அனைத்திற்க்கும் அதிபதி என்பதை சுலபமாக எடுத்துரைக்கும் இந்த ஸூக்தத்தை நாமும் தினமும் அனுசந்தித்து அவனருள் பெற்று உய்வோமாக.

தாஸன்

மங்களானி பவந்து. ஸ்ரீ. முத்து

ஸ்ரீ :

ஸ்ரீமத்விகநஸமஹாகுரவே நம :

ஸ்ரீவைகாநஸ ஸூத்தரீய ப்ரார்த்தனா ஸூக்தம்

1. ப்ரீயதாம் பக்வான்விஷ்ணு : ஸர்வதேவேச்வரோ ஹரி: |
ஸ்ரீவத்ஸாங்க ஸ்ஸுஹஸ்ராக்ஷ : ஸுஹஸ்ர் சரணஸ்ததா ||

2. ஜிதந்தே புண்ட்ரீதாக்ஷ நமஸ்தே விச்வபாவ்ன |
நம்ஸ்தேஸ்து ஹ்ருஷீகே ச மஹாபுருஷ பூர்வ்ஜ ||

3. பவ்ந்து ஸர்வா : புண்யாக்யா நிமித்தா ஸ்ஸோபனான்வீதா: |
த்வத்ப்ரஸாதாத்வ்யம் விஷ்ணோ : துவதாஸாஸ்ஸமாக்தா: ||

4. ஸாதயாமோ வீமானந்தே ப்ரஸாதம் குருனோ ப்வான்|
ஸாஹாய்யம் ஸர்வ்ப்ருத்யாஸ்தே குர்வந்து தவ ஸாஸ்னாத் ||

5. ஸாந்தவீஸாதி பூதாதீன் விஸ்ருஜ்ஜாஸ்மாபிரேவ்து |
அனபாயீ ப்ரியாத்வக்ரே சித்வா வீக்னம் புன: புன:||

6. ப்ரஷ்டே ஸ நந்த்கோ யாது கதா வர்மம் ஸுரக்ஷ்து |
ஸுங்கஸுக்தீத்ரே பார்ஸ்வே யதேஷாம் கர்யலித்தயே ||

7. சேஷ்தாதச்சந்து சாஸ்மாபி : ப்ரஸாத்தவ ஸர்வ்ஸு: |
த்வத்ப்ரஸாதாத் வ்யம் வீர: தரிஷ்யாமோ த்ரஹந்தவ ||

8. யதோபுலம் தஹத்ஸுர்ய : தனுமுஷ்ணத்வமா ஸ்ரித: |
தத்தா வயம் ஹ்ரி த்வத்வீர்யா : சுஸ்ருஷ்மனுபால்ய ||

9. அஸ்தி சேத்கரு ணாத்வத்தத் சாஸ்மாகம் தாஸுகர்மணாம் |
அனுமந்தா ப்வத்ப்ரீத : ஸர்வே யாசாமஹே வ்யம் ||

10. இந்த்ர் : ஸுதகர்துர்வீர : ஸர்வராஜ : ஸுசீப்தி: |
ப்ரியதாம் பகவான் விஷ்ணு : ஸர்வலோக ஸுபப்ரத:||

11. அக்னிரர்க்ய : ப்வித்ராணாம் தேவான்னாமக்ரதோ ஹ்ரி: |
ப்ரியதாம் பகவான் விஷ்ணு: ஸர்வபோக்தா ஸுகாவஹ: ||

12. ஸர்வலோகோத் ப்வோ விஷ்ணு : யமோ யமதர : ப்ரஜா: |
ப்ரியதாம் தண்ட்ப்ருன்நேதா தர்மாத்மா தர்மபால்க:||

13. ப்ரஜா ரக்ஷன் வினிக்னன் வை யாது தான நஜ: ப்ர்பு: |
நிர்ருதி : ப்ரியதாம் நீலோ நீலோத்ப்ல தல ப்ரபு: ||

14. வருண : ப்ரசேதா பதவான் விக்ரமீ யக்ஞபால்க: |
ரக்தாம்பரத்ரோ வீர: ப்ரியாதாம் ப்ரபுரவ்யய: ||

15. வாயுஸ் ஸர்வாத்மகோ பத்ர உதானோ ஜவனோ ம்ருத் |
ப்ரியதாம் பகவான் ப்ராண: ஸுசீப்தி ஸகா ப்ரபு: ||

16. ராஜராஜோ தனாத்யக்ஷோ குபேரோ விச்ரவஸ்ஸுத : |
ப்ரியதாம் நிதிஸம்யுக்த: ஈஸ்வரஸ்ய ஸகா ப்ரபு :||

17. ஈஸ்ஸ்த்ரிலோசன ஸ்ஸுலீ வ்ருஷப்த்வஜவாஹன: |
ப்ரியதாம் கண்ப்ருன்நித்யம் த்ரயம்பகோம்பர ஸன்நிப:||

18. ப்ரஹ்ம்மாபிதா ம்ஹாவீரோ வேதவ்க்தா வ்ருஷாக்பி: |
ப்ரியதாம் பத்ம்கர்பாபோ விஷ்ணுப்த்ரோ விராட் · ஸ்வ்ராட் ||

19. திங்னாகா நர்க்ஸங்தாச்ச ஸர்வாச்சாந்தர தேவ்தா:|
ரவ்யாதயோ த்ரஹ்ரா பூதா ருஷய: ஸித்தசார்ணா:||
ப்ரியதாம் கண்ஸம்யுக்தா: குர்வந்து ச ஸஹாய்தாம் ||

20. பகவதோ ப்லேன, பகவதோ வீர்யேன, பகவதஸ்தேஜ்ஸா,
பகவத: கர்ம்ணா பகவதானுக்ருஹீதோ, பகவதானுத்யாதோ,
பகவத் கர்மகரிஷ்யாமி தத் ப்தவானனுமன்யதாம் ||

மங்களானி பவந்து

ஸ்வரத்தின் விளக்கம்

ᴗ = ஸ்வரிதம்,
| = தீர்க்க ஸ்வரிதம்
— = அனுதாத்தம்
குறியில்லாதவை = உதாத்தம்

ஸ்ரீ :

|| ஸ்ரீமத்விகநஸமஹாகுரவே நம:| |

ஸ்ரீவைகாநஸ ஸமித்தரீய ப்ரார்த்தனா ஸமிக்தம்

தமிழ் பொருளுரை

சங்கேந்தி டாக்டர் S. முத்து M.A., M.Phil., B.Ed.,MLIS., Ph.D.

1. ஸ்ரீவத்ஸம் என்கிற மச்சத்தை வலது மார்பில் அடையாளமாக உடையவனும், ஆயிரம் கண்களையும், பாதங்களையும் உடையவனும், அனைத்து தேவர்களுக்கும் தலைவனுமான பகவான் ஸ்ரீ விஷ்ணு த்ருப்தியடையட்டும்.

2. புண்டரீகாக்ஷனே உனக்கு மங்களாசாஸனம். ஜகத்ச்ருஷ்டி கர்த்தாவே உன்னை வணங்குகிறேன். ஆதிமுதலுக்கும் காரணகர்த்தாவான ஹ்ருஷீகேசனே உன்னை வணங்குகிறேன்.

3. அனைத்து காரியங்களும் ஶோபனமான / மங்களகரமான நிமித்தங்களை உடையனவாகவும், புண்யகரமாகவும் (நன்மையாகவும்) ஆகட்டும். உனது அனுக்ரஹ மஹிமையால் உன்னுடைய ஸேவகர்களாக நாங்கள் இங்கு கூடியிருக்கிறோம்.

4. ஹே! பகவானே நாங்கள் உனது இருப்பிடத்தை (பாகவானின் விமானத்தை) அடைகிறோம். எங்களுக்கு அருள்புரிவாயாக. உமது கட்டளையினால் அனைத்து கிங்கரர்களும் நல்ல முறையில் உமது சேவையைச் செய்யட்டும் (தங்களது கைங்கர்யங்களில் உதவிபுரியட்டும்)

5. ஶாந்தம், ஈஶாதி பூதங்கள் போன்றவைகளை அகற்றி எங்களுக்கு அருள் புரிவீராக. மேலும் ஏற்படும் தடைகளை அகற்றி அனபாயீ எனும் தேவதை கணங்கள் எங்களிடம் ப்ரியமாக இருக்க (தங்களது சேவையை இடையூறின்றி செய்ய) அனுக்ரஹிப்பீராக.

6. பகவானின் நந்தகம் எனும் கத்தி பின்புறம் செல்லட்டும், கதை (எம்பெருமானின்) இடது புறத்தைக் காக்கட்டும், சங்கும், சக்தியும் மற்ற இருபுறங்களையும் (முன்பும், வலப்புறமும்) அனைத்து காரியங்களும் நன்கு முடிவடைவதற்காக காக்கட்டும்.

7. மற்ற ஆதிசேஷ கணம் போன்றவைகளை உங்களுடைய அனுக்ரஹத்தால் எங்களுடன் எல்லாப்புறமும் வரட்டும். ஹே! வீரனே உமது அனுக்ரஹத்தால் தங்களது ஆஸ்தானத்தை (இருப்பிடத்தை) ஸித்தம் செய்வோமாக.

8. சூரியன் காலையில் இளைத்து இருந்தாலும் வெப்பம் ஏற ஏற அதன் துணைகொண்டு கல்லையும் சூடாகும்படி செய்கிறானோ, அவ்விதமே நாங்களும் உனது துணைகொண்டு உங்களுக்கு கைங்கர்யாதி சேவையைச் செய்வோம்.

9. தாஸவர்கங்களாகிற எங்களிடம் கருணை இருக்குமேயாகில் எங்கள் காரியங்களை ஆமோதிப்பவராகவும், எங்களிடம் ப்ரீதியடைந்து இருப்பீராக என்று யாசிக்கிறோம்.

10. இந்த்ரன் நூறு அச்வமேத யாகங்களைச் செய்து வீரனானவன். (கிழக்கு திசைக்கும்) அனைவருக்கும் அதிபதி / தலைவன். சசியின் பதி. இப்படிப்பட்டவனுக்கு அந்தர்யாமியான (ஸர்வலோக சுபப்ரதனான) அனைத்து உலகிற்கும் மங்களத்தை அளிப்பவனான பகவான் ஶ்ரீமந்நாராயணன் ப்ரீதியடையட்டும்.

11. அனைத்து சுத்திகரிப்பு வஸ்துக்களிலும் முதன்மையானதும், தேவர்களுக்கு முன்பு செல்பவரும் (தென் கிழக்கின் அதிபதியும்), எல்லாவற்றையும் உணவாக ஏற்று சுகத்தைத்தரும் அக்னிபகவானின் அந்தர்யாமியான பகவான் ஶ்ரீ விஷ்ணு த்ருபதியடையட்டும்.

12. அனைத்து உலகத்திற்கும் உற்பத்திஸ்தானம் பகவான் ஸ்ரீவிஷ்ணு. அவரே அனைவரையும் நியமிப்பவராகவும் ப்ரஜைகளுக்கு பயத்தை உண்டுபண்ணுபவராகவும் (யமனாகவும்), தர்மத்தை காப்பவராகவும் உள்ளார். (தென் திசைக்கு அதிபதியும்) தண்டத்தை தரித்தவருமான யமனிடம் அந்தர்யாமியாக இருக்கும் பகவான் த்ருப்தியடையட்டும்.

13. அசுரர்களை அழித்து நீலோத்பலதலன், நீலன் என்ற பெயருடன் மக்களைகாத்து வருபவனும் (தென்மேற்கு திசைக்கு அதிபதியும்) தலைவனாக இருக்கும் நிர்ருதிக்கு அந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயனான பகவான் ஸ்ரீஹரி சந்தோஷமடையட்டும்.

14. என்றும் அழியாதவரும், தலைவரும், அனைவரையும் ஊக்குவிப்பவரும், மஹாவீரனும், சிவந்த ஆடையைஅணிந்தவனும், யக்ஞங்களையும் (மேற்கு திசையையும்) காப்பவருமான வருணன் வடிவில் இருக்கும் பகவான் ஸ்ரீவிஷ்ணுவான ஸ்ரீமந்நாரயணன் காக்கட்டும்.

15. அனைத்திற்கும் ஆத்மாவாக மங்களகரமாக இருப்பவனும், (உதானன்) மேல் நோக்கிச் செல்பவனும், (ஜவனன்) வேகமாகச் செல்பவனும், (மருத்) எங்கும் அலைந்து கொண்டு இருப்பவனுமான வாயுபகவான் (வடமேற்கு திசையின்) அந்தர்யாமியான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ப்ரீதியடையட்டும்.

16. ஈஸ்வரனின் தோழனும், விஸ்ரவஸின் மகனும் செல்வத்திற்கு அதிபதியும் ராஜராஜனும் (வடக்கு திசைக்கு) அதிபதியான குபேரனுக்கு அந்தர்யாமியான பகவான் விஷ்ணு ப்ரீதியடையட்டும்.

17. ஈஸ்வரன் முக்கண்ணன், த்ரிசூலத்தை உடையவன், வ்ருஷபத்தை தனது கொடியிலும் : வாகனமாகவும் உடையவன், கணங்களுடன் கூடியவன் (வடகிழக்கு திசைக்கு) அதிபதியான ஈஸானனுக்கு அந்தர்யாமியான பகவான் விஷ்ணு ப்ரீதியடையட்டும்.

18. அனைத்து இடங்களிலும் வியாபித்திருப்பவனும் (ஆதிபுருஷனும்) மஹாவீரனும், வேதங்களை முதலில் உபதேசித்தவனும் தாமரையின் உள் பாகம் போன்ற (மஞ்சள்) நிறத்தவனும் பகவானின் மைந்தனும், தன்னைவிட மற்ற தலைவன் இல்லாதவனுமாகிய ப்ரஹ்மாவின் அந்தர்யாமியான பகவான் விஷ்ணு சந்தோஷமடையட்டும்.

19. திசைகளைக்காக்கும் (தாங்கும்) யானைகளும், பாம்புகளின் கூட்டங்களும் மற்ற அனைத்து தேவதைகளும் சூரியன் முதலிய க்ரஹங்களும், பிற பூதங்களும், ரிஷிகளும், சாரணர்களும், தங்கள் தங்கள் கணங்கள் அனைவருடனும் கூடியவர்களாக இருக்கட்டும். ததந்தர்யாமியான பகவான் நம்மிடம் (இந்த ப்ரார்த்தனையால்) சந்தோஷத்தை அடையட்டும் / உதவி புரிய வேண்டுகிறோம்.

20. பகவான் கொடுக்கிற அவனது சக்தியினால், பகவான் கொடுக்கிற அவரது திறமையால், பகவானுடைய தேஜஸின் மஹிமையால் பகவானது ஆக்ஞையை நிறைவேற்ற, பகவானால் அனுக்ரஹிக்கப்பட்டவர்களாக, பகவானால் எப்பொழுதும் நினைக்கப்பட்டவர்களாக (பகவானது ஸங்கல்பத்தினால் அனுக்ரஹிக்கப்பட்டவர்களாக) சுருத்யுக்த கர்மாக்களை பகவானின் ஆக்ஞையாகச் செய்கிறோம். பகவான் ஸ்ரீமந்நாராயணன் எங்களது செயல்களை ஆமோதித்து அனுமதி அளிக்கட்டும்.

மங்களானி பவந்து

பிரதிகள் கிடைக்குமிடம்

ஸ்ரீராஜாமணி பட்டாச்சாரியர்
பழைய எண் : 9, சன்னதி தெரு,
திருநெல்வேலி - 1.
போன் : 334624

வ. ஸ்ரீபாலஜி பட்டாச்சாரியர்
ஸ்ரீரகுமாயீஸமேத பாண்டுரங்கன் கோயில்,
தென்னாங்கூர்,
வந்தவாசி - 604408.
போன் : 04183 - 26999

வ. ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியர்
ஸ்ரீராம அனுக்ரஹம்
66A/1A, பாபூஜீ நகர், (ஆர்யாஸ் எதிர்புறம்)
திருநெல்வேலி ஜங்ஷன் - 627001.
போன் : 0462 - 335018

ஸ்ரீ.S.ரகுவீர பட்டாச்சாரியர்
தலைமை ஆசிரியர் ஓய்வு
S.V.D.S.V. சபை, ப்ரசாரகர்
மாருதி நகர்,
மதுராந்தகம் - 603306.